## DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | STC No. 411/2022 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for Prosecution | : | P.W.5 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலகிருஷ்ணன் | தொழில் | : | |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | | ஜாதி | : | |
| கிராமம் | : | | இனம் | : | |
| தாலூக்கா | : | | வயது | : | |
| Mail ID | : | | Mobile No. | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.03.2025.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது அமராவதி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிநது வருகிறேன். இதற்கு முன்பு உடுமலை காவல் நிலையத்தில் தலைமை காலலராக பணியில் இருந்த போது கடந்த 29 8 2019 ஆம் தேதி நான் நிலைய அலுவலகத்தில் இருந்தபோது பகல் 11 மணி அளவில் நிலையம் ஆஜரான ஜே ஜே நகர் சார்ந்த தங்கையா மகன் ஜெயராஜ் என்பவர் கொடுத்த புகார் வாக்குமூலத்தினை பெற்று பரிசீலனைக்கு பின் நிலைய குற்ற எண் 455/2019 சட்டப்பிரிவு 287 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கையை பதிவு செய்து முதல் தகவல் அறிக்கையை உயரதிகளுக்கு அனுப்பி வைத்தேன் புலன் விசாரணை நிமித்தம் உதவியாளர் சையது இஷாக் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். முதல் தகவல் அறிக்கை அசா.ஆ.3 என குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார் என்று சொன்னார்

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. புகார் கொடுக்க சுமார் எத்தனை பேர் வந்தார்கள் என்றால் ஞாபகம இல்லை. எழுதி கொண்டு வந்தாரா அல்லது வந்து எழுதினாரா என்றால் வரும் போது கொண்டு வந்தார். புகார் 24 மணிநேரம் காலதாமதம் என்றால் சரிதான். அதற்காக காரணம் குறித்து புகாரில் சொல்லவில்லை என்றால் ஆமாம். புகார் 11.00 மணிக்கு கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் எவ்வளவு நேரத்தில் முதல் தகவல் அறிக்கை கொடுககப்பட்டது என்றால் சுமார ½ மணிநேரத்தில் கொடுக்கப்பட்டது. சம்பவம் நடந்த உடன் அரசு மருத்துவமனயைக்கு சென்ற நிலையில் உடனடியாக தகவல் வந்ததா என்றால் வந்தது சென்று பார்தத் போது கோவை மருத்துவமனைக்கு சென்று விட்டனர்.

2. புகாரில் பெண் என்ன வேலை செய்ததாக குறிப்பாக சொல்லவில்லை என்றால் மில் என்றும் மிசனில் வேலை செய்ததாகவும் சொன்னார். மிஷனில் என்ன வகையான வேலை என்று சொல்லவில்லை என்றால் சரிதான். மிஷனில் வேலை செய்யும் போது என்ன வகையான பாதுகாப்பு உபகரணம் பயன்படுத்தியது பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்த மில் விவசாயம் சார்ந்த சிறு தொழில் என்றால் மட்டை மில் சம்பந்தமான சிறு தொழில். பாதிக்கப்பட்டவருக்கு நஷ்டஈடு பெற வேண்டி பொய்யாக புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T. Nithyakala,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.